# வெஸ்டன் இந்தியா மிஷன்
# Western India Mission

**செய்திமலர்** **ஜூன் & ஜூலை 2022**

கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு.

ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில், உங்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஜூன் மாதத்தையும் காணச்செய்த தேவாதி தேவனுக்கு எல்லா மேன்மையும், மகிமையும், கனமும், துதியும் உண்டாகட்டும்.

இந்த ஜூன் மாதத்தில் புதிய கல்வியாண்டில் பள்ளிக்குச் செல்லும், புதிதாய் பள்ளிக்குச் செல்லவிருக்கும் நம் பிள்ளைகளுக்கு தேவன் ஞானத்தை அருளி நிறைவாய் ஆசீர்வதிக்க ஜெபிப்போம். கடந்த இரண்டு ஆண்டுகள் ஏற்பட்ட கொடிய சூழ்நிலைகள் முற்றிலுமாக மாறி, இந்த ஆண்டு முழுக்கல்வி ஆண்டாக, நம் பிள்ளைகளுக்கு பயன்பட தொடர்ந்து ஜெபிப்போம். பொதுத் தேர்வுகள் எழுதிய பிள்ளைகளுக்கு நல்ல மதிப்பெண்கள் கிடைக்கவும், உயர்கல்விகளுக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு தேவன் தகுந்த வழி நடத்துதலையும், விசேஷித்த ஞானத்தையும் அருளிச்செய்ய ஜெபிப்போம். உயர்கல்வியை கற்றுத் தேர்ந்த அனைவருக்கும் ஏற்ற வேலைவாய்ப்புகள் கிடைக்க ஊக்கமாக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். கடந்த நோய் தொற்று காலங்களில் ஏற்பட்ட வேலைவாய்ப்பில்லாமை, வேலையிழப்பு மற்றும் நமது பொருளாதார நிலை முற்றிலும் சீரமைக்கப்படாமை போன்றவற்றால் நம் பிள்ளைகள் பாதிக்கப்படாமல் சரியான வேலைவாய்ப்பினை பெற்று வாழ்வில் முன்னேற தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.



ஆராதனை வேளை : பூர்ஹி

சென்ற மாத இதழில் நாம் தெரிவித்தபடி, கடந்த மே மாதம் 18ல் நம்முடைய பணித்தளங்களில் VBS வகுப்புகள் தொடங்கி வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது, இந்த மாதம் 13ம் தேதி வரை VBS வகுப்புகள் அந்தந்த பணித்தளங்களில் நடைபெறும். சிறுவர்கள் மிகவும் ஆர்வமுடன் VBS வகுப்புகளில் கலந்து கொண்டு, வேத வசனங்களைக் கற்று மனனம் செய்யவும், நமது ஊழியர்கள் கற்றுக்கொடுக்கும் பாடல்களைக் கருத்துடன் பாடவும், வேதாகம சம்பவங்களை ஆர்வமுடன் கேட்கவும் செய்கின்றனர். சில பணித்தளங்களில் நாம் நினைத்ததை விட அதிகமான சிறுவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். இச்சிறுவர்கள் தேவனை அறியும் அறிவை அடையவும், இலவசமான இரட்சிப்பைப் பெறவும், தங்கள் வாழ்வில் தேவ வசனத்திற்குக் கீழ்ப்படியவும், இவர்கள் மூலம் இவர்களுடைய பெற்றோரும், முழு குடும்பமும் இரட்சிப்பை அடையவும் ஜெபிப்போம். VBS நடத்த பணத்தேவை குறித்து பகிர்ந்த போது, பல தேவபிள்ளைகள் மனம் உவந்து கொடுத்து உதவி செய்தீர்கள் பாலர்களின் நேசராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இன்னும் பணத் தேவைகள் உண்டு, ஜெபியுங்கள். முடிந்தால் உங்கள் வீடுகளை சந்திக்க வரும் நமது ஊழியர்களிடம் பணமாகவோ அல்லது நமது வங்கிகக்கணக்கில் பணத்தை செலுத்தியோ உதவ முன் வாருங்கள். அதற்கேற்ற பலனை தேவன் உங்களுக்கு நிறைவாய்த் தந்தருள ஜெபிக்கிறோம்.

நமது வியாரா பணித்தளத்தின் ஆலய கட்டுமான பணி அம்மக்களின் முழு ஒத்துழைப்புடன் சிறப்பாக நடை பெற்று வருகிறது அங்குள்ள முதல் தலைமுறை விசுவாசிகள் தங்கள் வேலைகளை ஒதுக்கிவைத்து, ஆலய கட்டுமான பணிகளை சிரமேற்கொண்டு பணியாற்றிவருகின்றனர். இந்த ஆலய கட்டுமானத்திற்குத் தேவையான செங்கல், சிமென்ட் மற்றும் தேவையான பொருட்கள் சீக்கிரத்தில்



ஏருசல்கோண்டி வீடு சந்திப்பு

வழி செய்ய வேண்டும். தேவ வழிநடத்துதலின் படி ஒரு குடும்பத்தினர் அதற்கான பணத் தேவைகளில் ஒருபகுதியை சந்திக்க முன்வந்துள்ளனர். மீதம் உள்ள தேவைகளில் உதவி செய்ய முன்வரும் தேவபிள்ளைகள் நமது ஊழியர்களோடு தொடர்புகொள்ளலாம். தேவ நாம மகிமைக்காக, அவருடைய இராஜ்ய விருத்திக்காக இந்த மகிமையின் ஆலயம் சீக்கிரத்தில் கட்டிமுடிக்கப்பட்டு பயன்படுத்தப் பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கடந்த மாதம் பூர்ஹி பணித்தளத்தில் நாம் கட்டிவந்த மிஷனெரி இல்லம் தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை பண்ணப்பட்டு, தற்போது நமது மிஷனெரி குடும்பம் அதில் தங்கி இருந்து ஊழியம் செய்ய தேவன் கிருபை செய்திருக்கிறார். இதைக் கட்டும் பணியில் உதவி செய்த அனைத்து தேவ பிள்ளைகளையும் தேவன் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக. பிரதிஷ்டைநாளில் 10பேர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள தேவன் கிருபை செய்தார். இவர்கள் தொடர்ந்து வேத வசனத்தின் படி விசுவாசத்தில் நிலைத்து நிற்கவும், ஆலய ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளவும் ஜெபியுங்கள். வேத வசனங்களை கேட்டுக் கொண்டிருக்கிற இன்னும் பலர் தங்களை அதற்கு ஒப்புக்கொடுத்து சீக்கிரத்தில் இரட்சிக்கப்பட்டு திருச்சபையில், சேர்க்கப்பட தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## சாட்சி

பூர்ஹி கிராமத்தில், மங்கு ஈச்சாமி என்பவரைப்பற்றி ஜெபிக்கும் படி பகிர்ந்து கொண்டோம். ஜெபத்தின் விளைவாக, இந்த மாதம் ஆலயத்திற்கு கொண்டு வந்தனர். பைத்தியம் போல பேசிக் கொண்டு வீட்டை விட்டு வெளியே ஓடி கொண்டிருந்தார். மேலும் சரீரத்தில் பெலவீனமான நிலைமை காணப்பட்டது. ஆனால் தற்போது இவர் தேவனால் சுகம் பெற்று தெளிந்த நிலையை அடைந்துள்ளார். சரீர பெலவீனம் முற்றிலும் நீங்கியது. மனதளவிலும் தெளிவு அடைந்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!




தாப்பி மாவட்டத்தில் உள்ள கிராமத்தில் VBS

# செய்தி

நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில், தேவன் எதிர்பார்க்கும் நிலையில் உயரவேண்டும் என்று விரும்பினால் அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் (யோவான் 3:30) என்று மெய்யாய் கூறும் நிலைக்கு நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் கொடுத்து வந்த வேளையில் யோவான்ஸ்நானகனுடைய சீஷரில் சிலர் இயேசுவைக் குற்றப்படுத்தும் விதமாக யோவானிடம் இயேசு ஞானஸ்நானம் கொடுக்கிறார். எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்று கூறினார். ஒரு வேளை இயேசு செய்வது தவறு என்று யோவான் கூறுவார் என்று எதிர்பார்த்து அவரிடம் முறையிட்டார்கள். யோவன்ஸ்நானகனோ அவர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்பதை உணர்ந்து அவர் அருகே நின்று அவருடைய சத்தத்தைக் கேட்கிற தோழனாக மிகவும் சந்தோஷப்படுகிறான். இந்த சந்தோஷத்தை சம்பூரணமாய்ப் பெற்ற யோவான் அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்று மனப்பூர்மாக கிறிஸ்துவின் அன்பை உணர்ந்தவனாகக் கூறுவதைக் காணலாம்.

பொதுவாக, என்னையும் என் குடும்பத்தையும் ஆசீர்வதியும் என்று தான் நம் அனைவரது ஜெபமும் இருக்கிறது. யோவான்ஸ்நானகன் 'நான் சிறுகவும் ஆசீர்வதிக்கும் ஆண்டவர் பெருகவும் வேண்டும்' என்று கூறுகிறார். இதற்கு நாம் ஒன்றுமில்லாமல் சிறுமைப்பட்டு, பட்டினியாயிருக்க வேண்டும், வாழ்வில் எல்லா நன்மைகளையும் இழந்து போக வேண்டும் என்று அல்ல, ஆனால் ஆவிக்குரிய பிரகாரமாக நாம் சிறுக வேண்டிய மூன்று காரியங்களைக் குறித்து யோவான் 3 : 31 36 ம் வசனங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைக் குறித்து நாம் தியானிப்போம்.

### 1. பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து பூமிக்கு அடுத்தவைகளைப் பேசுகிறான் {யோவான் 3:31}

பொதுவாக, இவ்வுலகத்தின் மனுஷர், பொருளாதாரம் தங்களுக்கு நிறைவாய் கிடைக்க வேண்டும் என்ற ஒரே சிந்தை உடையவர்களாய் வாழுகிறார்கள். சிலர் மேலான அதிகாரமுடையவர்களாய் வாழ முயற்சி செய்கிறார்கள் இன்னும் பலர்

ஜெப விண்ணப்பங்களை அனுப்ப..

இம்மாத உபவாச ஜெபம் 28.06.2022 அன்று நமது அலுவலகத்தில் வைத்து நடைபெறும். தனிப்பட்ட ஜெபக்குறிப்புகளை அனுப்ப விரும்புகிறவர்கள் 8838261572 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு தெரிவிக்கவும். உங்களுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.

தங்களுடைய பெயர், புகழ் உலகமெங்கும் பரவ வேண்டும் என்று விரும்புகிறார்கள். இவற்றை அடைவதே மேலான நோக்கமாகக் கொண்டு எப்பொழுதும் அவற்றையே சிந்தனையில் கொண்டு செயல்படுகிறார்கள். ஒருவேளை, இவர்களில் சிலர் தங்கள் நோக்கத்தை அடையக் கூடும். ஆனாலும் மேன்மையாகத் தோன்றும் இவைகள் இவ்வுலக வாழ்க்கையோடு முடிவடையும், நித்திய வாழ்விற்குச் செல்ல ஒருக்காலும் நமக்கு உதவாது எனற உண்மையை இவர்கள் அறிந்திருக்கவில்லை. லூக்கா 16ம் அதிகாரத்தில் ஐசுவரியவான் மரித்து அடக்கம் பண்ணப்பாடுகிறான். பூமிக்கடுத்த சிந்தனையையுடைய இவன், பாதாளத்திலே வேதனைப்படும்பொழுது, தனது இரட்சிப்புக்காவும், தனது குடும்பத்தினரின் இரட்சிப்புக்காகவும் அவன் செய்த வேண்டுதல் கேட்கப்படவில்லை (லூக் 16:23,26) என்று காண்கிறோம். நாம் வாழும் இந்நாட்கள் நம் இரட்சிப்பை உறுதிப்படுத்திக்கொள்ள தேவன் நமக்கு தந்த கிருபையின் நாட்கள், நமது இரட்சிப்பை உறுதிப்படுத்திக் கொள்ள தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் நம்மை அழிவிற்கு, மரணத்திற்கு அழைக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தேவன் நம் அனைவர் மீதும் அன்பு கொண்டு, அவருடைய வார்த்தையாகிய வேத வசனத்தின் மூலம் நாம் நடக்க வேண்டிய பாதையை நமக்கு விவரித்துக் காட்டுகிறார். ஆனால், நாம் உலக சிந்தையோடு வாழும் போது, இவைகளை அறிய தக்க அறிவு நமக்கு இல்லாமல் போகும். யோவான் 10ம் அதிகாரத்தில் இயேசு ஜனங்களிடம், "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான். நானே நல்ல மேய்ப்பன் ; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்றார். ஜனங்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை. அவர்களில் அநேகர்: இவன் பிசாசு பிடித்தவன், பயித்தியக்காரன் ; ஏன் இவனுக்கு செவிகொடுக்கிறீர்கள் என்றனர். நாமும் இவர்களைப் போல தேவனைப்பற்றி நமக்குத் தெளிவாக உபதேசிக்கப்பட்ட பின்பும், உலகத்தின் தன்மை உடையவராயிருப்பின், அவரை பயித்தியக்காரன்' என்று கூறுமிடத்திற்குத்தான் வருகிறோம். பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்மென்று விலகாதபடி எச்சரிக்கையயிருங்கள் ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலீக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்? ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்.(எபிரே 12 : 25, 28)

## 2. அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக்கொள்கிறதில்லை {யோவான் 3:32}

மனித வாழ்வின் ஆதி முதல் இன்றுவரை தேவன் தம்முடைய சாட்சிகளை நம்முன் நிறுத்தி, இந்த சாட்சிகளுடன் நம்முடைய வாழ்வினை ஒப்பிட்டு பார்த்து, நம்மை நித்திய ஜீவனை அடைவதற்குப் பாத்திரவான்களாக்க, தேவன் செயல் பட்டுக்கொண்டேயிருக்கிறார். பழைய

ஏற்பாட்டு சாட்சிகளோடு, இயேசு தம்மைத் தாமே சாட்சியாக நமக்கு வெளிப்படுத்துகிறார். அவர் மனிதனாக அவதரித்தது மட்டுமன்றி, வியாதியஸ்தர்களை குணமாக்கி, எல்லோரும் இரட்சிக்கப்பட தன்னையே தியாக பலியாக ஒப்புகொடுத்து, மூன்றாம் நாளில் மரணத்தை ஜெயித்து உயிர்தெழுந்து ஜீவனுள்ள தேவனாக நம்மில் வாசம்பண்ணுகிறார்.

அதேவண்ணம், ஸ்தேவான் முதல், ஆதி அப்போஸ்தலர் மட்டுமின்றி இன்று வரை உண்மையுள்ள சாட்சிகளாக ஜீவித்த அநேக சாட்சிகளை தேவன் நமக்கு எழுப்பியுள்ளார். இந்திய மொழிகளிலே முதன்முதலாக (தமிழ் வேதாகமத்தை) அச்சிட்டு வெளியிட்ட ஜெர்மன் தேசத்தைச் சார்ந்த சீகன்பால்க் ஓர் அற்புதமான சாட்சி. இவர் தமிழகத்தில் உள்ள தரங்கம்பாடி என்ற இடத்திற்குவந்து, தெரியாத தமிழ்மொழியைக் கற்று, புதிய ஏற்பாட்டினை தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிட்டார். அவர் கடின உழைப்பு, தியாகம், கால சூழ்நிலை ஒவ்வாமையினால் தனது 36ம் வயதில் 1719 ல், தரங்கம்பாடியில் மரித்தார். அவர் ஏற்றிய தீபம், இன்று அநேகருடைய வாழ்வில் வேதாகமாக ஒளிருகிறது.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரஹாம்ஸ்டெயின்ஸ், குஷ்டரோகிகளுக்கு சேவை செய்யவும், தேவனுடைய நற்செய்தியையும், தேவன் சுகமளிக்க வல்லவர் என்பதையும் சாட்சியாக அறிவிக்க இந்தியாவிலுள்ள ஒரிசா மாநிலத்திற்கு வந்தார். ஏராளமான குஷ்டரோகிகளுடைய வாழ்வில் குடும்பமாக ஒளியேற்றி வைத்தனர். அதனைப் பொறுக்க இயலாதவர்கள் 23 ஜனவரி 1999ல் அவரை மற்றும் அவரது இரண்டு குமாரரோடு அவர்களுடைய வாகனத்தில் வைத்து, மூன்று பேரையும் தீவைத்து எரித்து கொன்றனர். ஏன்? இயேசுவின் சாட்சிகளை ஏற்றுக்கொள்வார் இல்லை ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்து குஷ்டரோகிகளுடைய வாழ்வில் ஒளியேற்றிய இவருடைய வாழ்க்கை ஓர் மகிமையான சாட்சி

அன்பானவர்களே, இன்னும் ஏராளமான சாட்சிகள் உண்டு. இத்தகைய சாட்சிகளை ஏற்றுக்கொள்ளுகிற கூட்டத்தில் நாம் இருக்கிறோமா? அல்லது புறந்தள்ளுகிற கூட்டத்தில் இருக்கிறோமா? சிந்தித்து செயல்படுவோம். ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மை சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் (எபிரேயர் 12 : 1)

## 3. குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை {யோவான் 3 : 36}

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தைகளை விசுவாசிக்காத பெரும் கூட்டம் அன்றும் இருந்தது இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. நம்மில் பலர்

வசனத்தைக் கேட்கிறோம். ஆனால் வாழ்க்கையில் அதன்படி நடப்பதில்லை. ஏனென்றால், "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசியாதபடியால் அவருடைய வசனம் உங்களில் தரித்திருக்கிறதில்லை (யோவான் 5 : 38). தேவன் அளிக்கும் ஆத்தும இரட்சிப்பு, விடுதலை மற்றும் நித்தியமான பாரலோக வாழ்க்கை பற்றிய மேன்மைகளை நன்கு அறிந்த பலர் அவைகளை அடையாமல், உலக மேன்மையையே நாடுகின்றனர். நித்திய வாழ்வுக்குத் தங்களை தூரமாக்குகின்றனர். உலக சிற்றின்பங்களை, செல்வாக்குகளை நாடி ஓடுகின்றனர். ஏன் தெரியுமா? நானே (இயேசுவாகிய) அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" (யோவான் 8:24). இயேசுவை முழு நிச்சயமாக நம்பி நம்மை அவரிடம் ஒப்படைப்போம். நம் உள்ளான மனிதன் எப்படிப்பட்டவன் என்று ஆண்டவர் அறிகிறார். நம் உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்பட வேண்டும், நாம் பாவங்கறை கழுவப்பட வேண்டும், சிந்தனைகளை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆண்டவர் நம்மோடு இடைபடுகிறார். பல சந்தர்ப்பங்கள் மூலம் சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். நாம் தான் அதனை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிறோம். "நான் உங்களுக்கு சத்தியத்தை சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை" (யோவான் 8:45).

இயேசுவே, நான் சிறுக எனக்கு உதவி செய்யும். பூமிக்கடுத்தவைகளைப் பேசுவது, உம்முடைய சாட்சிகளை ஏற்றுக்கொள்ளாமலிருப்பது, உம்மை விசுவாசியாமலிருப்பது என்ற மூன்று குறைகளையும் என்னை விட்டு அகலச் செய்யும். அப்பொழுது கிறிஸ்து என்னில் பெருகுகிறதைக் காணவும், என் மூலம் அநேகர் இரட்சிப்புக்குள் நடத்தப்படவும் என்னை பக்குவப்படுத்தும். எங்கள் மூலம் உம்முடைய நாமம் மகிமைபடட்டும். ஆமென்.

**இந்த மிஷனெரி ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள எங்கள் வங்கி கணக்கில் ECS மூலம் பணம் அனுப்பி உதவலாம்.**

**Canara bank, Vannarpettai Branch, Tirunelveli**
**A/c Name: Western India Mission**
**A/c No: 2952101007959**
**IFSC Code: CNRB0002952**

**Axis Bank, KTC Nagar, Branch, Tirunelveli**
**A/c Name : Western India Mission**
**A/c No : 922010016879568**
**IFSC Code : UTIB0003601**

**(பணம் அனுப்பப்பட்ட விபரத்தையும், M.O மூலம் பணம் அனுப்பி ஊழியங்களுக்கு உதவிசெய்வோரும் 9944306154 என்ற செல்போனுக்கு SMS மூலம் தெரியப்படுத்தினால் உங்களுக்கு ஒப்புகை ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)**

# ஜெபவிண்ணப்பங்கள்

- குஜராத் சட்டமன்றத் தேர்தல் இவ்வருட இறுதியில் நடைபெற இருக்கிறது. அதனால் கிராமப்புறங்களில் ஆங்காங்கே இந்து முஸ்லீம் கலவரங்களைப் பார்க்க முடிகிறது. நமது பணித்தள வியாரா பகுதியில் 19ந்தேதி இரவில் கலவரம் நடந்தது. சமாதான பிரபு சமாதானம் கட்டளையிட ஜெபியுங்கள்.

- ரமியா மற்றும் பிரமிளா இருவருக்கும் ஏற்பட்ட விபத்தில் பிரமியாயேனுக்கு கிடைக்க பூரண சுகத்திற்காக. ரமிலாபேனின் மூளையில் அறுவை சிகிச்சை நடந்திருக்கிறது. சிகிச்சையும் தொடர்கிறது. விரைவில் குணமடைய தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

- கந்தோடி, எமிலி, மார்க்கல் டோலா கிராமங்களுக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளவும். இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த மூன்று கிராமங்களிலும் புதிய விசுவாசிகளை சந்தித்து வீட்டு ஜெபக்கூடுகை ஆரம்பிக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறோம். இந்த கிராமங்களை குறித்த தகவல்களை ஏற்கனவே பகிர்ந்து கொண்டோம், மேலும் இந்த கிராமங்களில் மந்திரவாத வல்லமை பலமாய் செயல்பட்டு வருகிறது. மந்திரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. இந்த வல்லமைகள் அழிக்கப்பட் ஜெபிக்கவும்.

- பிம்ரி பகுதியைச் சேர்ந்த சரிகா, இவருடைய கணவர் அரவிந்த் தினமும் குடித்து குடும்பத்தில் பிரச்சனை கொடுக்கிறார். அவர் குடியை விட்டு மனம் மாற குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

- கேகாவ் பகுதியில் லட்சுமி பாயி என்பவர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டி வருகிறார். தொடர்ந்து விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அன்பரின் பணியில்,

**Dr. G. ஜெயக்குமார் மற்றும் ஊழியர்கள்**


**உங்கள் ஜெப தேவைகளுக்கும் மேற்கு இந்திய பகுதிகளில் நடைபெறும் மிஷனெரி ஊழிய விபரங்களை அறிந்து கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எங்கள் மொபைல் எண்கள் மற்றும் முகவரி:**

| | | | |
|---|---|---|---|
| Dr. ஜெயக்குமார் | 9894075795 | சகோ. தங்கராஜ் | 9944306154 |
| சகோ. செல்வக்குமார் | 9994040186 | சகோ. ஃபெலிக்ஸ் | 9600992654 |
| சகோ. கோயில்பிள்ளை | 9159827209 | | |

*Our Address:*

**Western India Mission,**

**C-98, East Rahmath Nagar, Tirunelveli 627 011.**

வெஸ்டன் இந்தியா மிஷன் சி-98 கிழக்கு ரஹ்மத் நகர் திருநெல்வேலி 627 011

இணையதள முகவரி : https://westernindiamission.com



DIOCESAN OFFSET PRESS, PALAI - PH : 0462 - 2573182